# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 9/ந/2026, நாள் 17.04.2026

P. அன்பரசன்,
திருத்துறைப்பூண்டி, திருவாரூர். – முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்

2. தாளாளர்,
தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
திருத்துறைப்பூண்டி, திருவாரூர்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, நேரு நகர், மருத்துவமனை தெரு, கதவு எண்.141–சி என்ற முகவரியில் வசிக்கும் திரு P. அன்பரசன் என்பவரது 13.01.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2026 அன்று பெறப்பட்டு 9/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, நேரு நகர், மருத்துவமனை தெரு, கதவு எண்.141–சி என்ற முகவரியில் வசிக்கும் திரு P. அன்பரசன் என்பவரின் 13.01.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:-

"திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகரம், 6–வது வார்டு, அரசலடி தெருவில் சர்வே எண். 97/2பி மற்றும் 98 விவசாய நிலத்தில் அமைந்துள்ள தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியானது முறையான அனுமதி பெறாமலும், சட்டத்திற்கு புறம்பாகவும் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

மேலும், மேற்காணும் பள்ளிக்கு செல்ல முறையான அணுகுபாதை எதுவும் இல்லாமல் ஆதிதிராவிட மக்களுக்கு, ஆதிதிராவிட நலத்துறையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரு சாலையில், திருத்துறைப்பூண்டி நகராட்சியினால் அமைக்கப்பட்டுள்ள 12 அடி சாலையினை பயன்படுத்தியும், பொதுப்பணிதுறையின் அனுமதிபெறாமல் வடிகால் வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைத்தும், மாணவர்கள், மாணவியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆபத்தான வகையில் செல்லும் வகையில் உள்ளது.

மேலும், மேற்கண்ட பள்ளிக்கு செல்லும் குறுகிய சாலையில் நாள்தோறும் 100க்கும் மேற்பட்ட வேன்கள், கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் சென்றுவருவதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது.

அடிப்படை வசதி இல்லாமல், பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் இயங்கி வரும் பள்ளி கட்டிடத்தில், சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் பள்ளியின் கழிவறை சுவர் இடிந்து விழுந்து பள்ளியில் பயின்ற மாணவர்

இறந்துள்ளார். இதனை பள்ளி நிர்வாகம் வெளியில் தெரியாமல் மூடி மறைத்துள்ளது. இந்நிலையில் பள்ளிகட்டிடத்திற்கான கட்டிட அனுமதி ஏதும் பெறப்படாமல், சட்டத்திற்கு புறம்பாகவும் பள்ளியை நடத்துவதற்கு அடிப்படை வசதியின்றியும், பாதுகாப்பற்ற முறையில் செயல்பட்டு வருகிறது.

எனவே, ஆபத்தான வகையில் இயங்கிவரும் அணுகுபாதை இல்லாத மேற்கண்ட பள்ளி கட்டிடத்திற்கான தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம், 35, 1972) பிரிவு 56–ன் துணைப் பிரிவு (2–A)ன் கீழ் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இயங்கும் பள்ளி கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட எவ்வித நடவடிக்கையும் எடுக்காத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

2. முறையீட்டு மனுதாரரின் புகார்மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

3. திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை கடிதம் ந.க.எண்.5180/2012/எப்–1, நாள் 05.02.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

''திருத்துறைப்பூண்டி, புனித அந்தோனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி தாளாளரின் 11.10.2012 நாளிட்ட விண்ணப்பத்தில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு–பி, பிளாக்–5, ந.க.எண்.22/1, 23/3, 4, 5 (புல எண்கள்–97/2பி, 98) அரசலடி தெருவில், பள்ளி கூடுதல் கட்டிடம் கட்ட தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் சுமார் 1495.97 சதுர மீட்டர் அளவில் அனுமதி கோரியதை திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.5180/2012/எப்1, நாள் 12.12.2012 மூலமாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.1563/2012/தம, நாள் 08.02.2013 கடிதத்தில் மேற்படி கூடுதல் பள்ளிகட்டிடம் கட்ட அனுமதிகோரும் இடம் திருத்துறைப்பூண்டி முழுமைத் திட்டத்தில் வணிகப் பகுதியாகவும், விவசாயப் பகுதியாகவும் அமைவதால் அனுமதி அளிக்க வழிவகை இல்லை எனவும் நிலப் பயன்பாடு (கல்வி உபயோக பகுதியாக) மாற்றத்திற்குபின் பரிசீலிக்கப்படும் என திருப்பப்பட்டது.

இந்நிலையில், மேற்கண்டுள்ளவாறு திருத்துறைப்பூண்டி முழுமைத் திட்டத்தில் வணிகப் பகுதியாகவும், விவசாயப் பகுதியாகவும் உள்ள இடத்தில் நில உபயோக பயன் மாற்றம் செய்யாமலும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறப்படாமலும் மற்றும் இந்நகராட்சியின் இறுதி ஒப்புதல் பெறப்படாமலும் தன்னிச்சையாக கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டியுள்ளதற்கு இந்நகராட்சியின் அறிவிப்பு நாள் 05.02.2015, 23.03.2023 அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டுமானத்திற்கு 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், பிரிவு 216 (1) (2), 205 (1) (2)ன் பிரிவின்படி 1/2023/எப்1 என எண்ணிட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு, புனித அந்தோனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி தாளாளரின் பதில் கடிதம் நாள் 31.03.2023–ல், தங்கள் பள்ளி 2000–ஆம் ஆண்டு முதல் மேற்படி இடத்தில் இயங்கிக் கொண்டு இருப்பதாகவும் 2011க்கு முன் கட்டப்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் நகராட்சியின் உரிமையாணை பெற்று அதற்கான சொத்துவரி முறையாக செலுத்தி வருவதாக உண்மைக்கு மாறானதாக தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து இவ்வலுவலக பதில் கடிதம் ந.க.எண்.5180/2012/எப்1, நாள் 08.04.2023 வழியாக தாளாளர், புனித அந்தோனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பதில் அனுப்பப்பட்டது.

''இந்நகராட்சியால் அனுமதியளிக்கப்பட்ட தரைதள கட்டிடத்திற்கு மட்டும் சுமார் 13,180 சதுர அடி பரப்பளவுக்கு சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. அதாவது 2000 ஆம் ஆண்டு கட்டிட அனுமதி பெறப்பட்ட தரைதள கட்டிடத்திற்கு, 2001–2002 ஆம் ஆண்டு 6 எண்ணிக்கையிலான சொத்துவரி கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. (வரி விதிப்பு செய்யப்பட்ட எண்கள் 2826, 2827, 2828, 2829, 2830, 2831)

அதன்பின் (2000 ஆம் ஆண்டுக்கு பின்) இந்நகராட்சி மூலமாக அனுமதி பெறப்பட்ட இந்நகராட்சி கட்டிட அனுமதி எண்.25/2000, நாள் 16.05.2000 காணும் முதல்தள கட்டிடத்திற்கும் (சுமார்13,180 சதுர அடி), இந்நகராட்சி கட்டிட அனுமதி எண்.42/2003, நாள் 07.10.2003 காணும் கூடுதல் பள்ளி கட்டிடம் தரைதளம், முதல் தளம், மற்றும் இரண்டாம் தளம் (சுமார் 7266 சதுர அடி) கட்டிடத்திற்கும், மேலும் இந்நகராட்சியின்

மூலம் அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள கூடுதல் பள்ளிகட்டிடம் (சுமார் 18145 சதுர அடி) கட்டிடத்திற்கும், மேலும், இந்நகராட்சி மூலம் வரிவிதிப்பு செய்யாமல் சுமார் 38591 சதுர அடி பரப்பளவுக்கு வரி ஏய்ப்பு செய்து விட்டு, 2011க்கு முன் கட்டப்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்து வரி முழுமையாக செலுத்துவதாக தெரிவித்துள்ளது ஏற்க இயலாது.

தாளாளர், புனித அந்தோனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, திருத்துறைப்பூண்டி என்பவரின் 13.09.2023 நாளிட்ட விண்ணப்பத்தில் மேற்படி பள்ளிக்கு சுகாதாரச்சான்று கோரி விண்ணப்பம் செய்யப்பட்டதின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, இந்நகராட்சியின் அறிவிப்பு நாள் 05.02.2015, 23.03.2023–ல் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்திற்கான உரிய கட்டிட அனுமதி பெற்று அதன் விவரத்தினை தெரிவிக்கும் பட்சத்தில் சுகாதாரச்சான்று வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை தெரிவித்து, இந்நகராட்சி அறிவிப்பு கடிதம் ந.க.எண்.2594/2023/எச்1, நாள் 18.12.2023 மூலம் தெரிவிக்கப்பட்டது. ”

இந்நிலையில், ஏற்கனவே சுகாதாரச் சான்று வழங்க மறுக்கப்பட்டு உரிய விவரம் தெரிவிக்கப்பட்டும் இதுநாள் வரை பள்ளி நிர்வாகத்தால் அதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் புனித அந்தோனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி தாளாளரின் விண்ணப்பம் நாள் 19.09.2024 மூலம் மேற்படி பள்ளிக்கு சுகாதாரச்சான்று கோரி மீண்டும் விண்ணப்பம் செய்யப்பட்டதினை தொடர்ந்து இதுவரை திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998, பிரிவு 133, 134 மற்றும் 135 (1)–ன் கீழ் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 ஆகியவற்றின்படி குறிப்பிட்டுள்ள காலகெடுவிற்குள் எந்த விளக்கத்தையும் தெரிவிக்காமல், நடந்துகொள்ள தவறும் நிலையில் பள்ளி நிர்வாகம், கட்டியுள்ள கட்டிடம் அனுமதியற்ற கட்டுமானம் என தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998 பிரிவு 135 (6)ன் கீழ் உறுதி செய்யப்பட்டு பிரிவு 134ன் கீழ் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படும். திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998, 134–ன் கீழ் ரூபாய் ஒரு இலட்சம் வரை அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து விதிமீறல் நடைபெறும் நிலையில் நாள் ஒன்றுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.50/– வீதம் அபராதம் கூடுதலாக செலுத்த வேண்டி வரும். மேலும், பள்ளி நிர்வாகம் மேற்படி அனுமதியற்ற கட்டுமானத்தினை முறைப்படுத்தி அனுமதி பெற்றுக்கொள்ளும் வரையில் அல்லது இடித்து அப்புறப்படுத்தும் வரையில் மேற்படி சட்டப் பிரிவு 135(1) மற்றும் (6)ன் கீழ் அனுமதியற்ற கட்டுமானத்தினை பூட்டி முத்திரையிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பள்ளி நிர்வாகத்திற்கு இந்நகரரட்சி அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு கடிதம் நாள் 20.09.2024 மூலம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இந்நகராட்சி அறிவிப்பு கடிதம் ந.க.எண்.2073/2024/எச்1, நாள் 03.10.2024 மூலம், உரிய கட்டிட அனுமதி பெற்று அதன் விவரத்தினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் சுகாதாரச்சான்று வழங்குவது குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்பதை தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் திரு. ப. வின்சென்ட் ஆரோக்கியராஜ், புனித அந்தோனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, திருத்துறைப்பூண்டி என்பவரின் அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு நாள் 20.09.2024–க்கான பதில் கடிதம் நாள் 03.10.2024ல் இந்நகராட்சியால் அனுப்பப்பட்ட அனுமதியற்ற கட்டுமானங்களுக்கான அறிவிப்பு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மேற்படி பள்ளி வளாகத்தில் உள்ள அனுமதியற்ற கட்டிடங்களை முறைப்படுத்திக்கொள்ள DTCP விண்ணப்ப எண். APP 10084, நாள் 22.08.2024–ன்படி திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளதாக பள்ளி நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்டுள்ளவாறு பள்ளி வளாகத்தில் உள்ள அனுமதியற்ற கட்டிடங்களை முறைப்படுத்திக்கொள்ள திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு இணையதளம் வழியாக விண்ணப்பித்திருந்தால், அதன் தற்போதைய நிலை குறித்த விவரத்தினை தெரிவிக்கக்கோரி இவ்வலுவலக 04.10.2024 நாளிட்ட கடிதம் ந.க.எண்.5180/2012/எப்1 மாவட்ட ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.747/2024/டி.வி.ஆர்., நாள் 26.11.2024ல் திருவாரூர் மாவட்டம், திருத்துறைபூண்டி வட்டம் மற்றும் நகரம் வார்டு–பி, பிளாக்–5, நகரளவை எண்கள் 22/1, 23/3, 23/4 (ம) 23/5 ஆகியவற்றில் பள்ளி கட்டிட அனுமதி கோரிய இடம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்துறைப்பூண்டி நகராட்சி முழுமைத் திட்டத்தில் விவசாயப் பகுதியில் உள்ளதனை கல்வி உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்படாத நிலையில் நில உபயோக மாற்ற விதிமீறல்கள் மற்றும் TNCDBR 2019 படியான அநேக கட்டிட விதி மீறல்களுடன் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மனுதாரரின் மேல்முறையீட்டு மனு

அரசாணை (3டி) எண்.23, வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி (ந.வ.5(1) துறை, நாள் 07.06.2024இல் மறுத்து திருப்பப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி பள்ளி நிர்வாகத்தின் மூலமாக 2025–26 ஆம் கல்வி ஆண்டுக்கு சுகாதாரச் சான்று வழங்க கோரியுள்ளது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டதில், பள்ளி நிர்வாகத்திற்கு 2024–25ஆம் கல்வி ஆண்டுக்கு சுகாதாரச் சான்று வழங்கும்போது அனுமதியற்ற பள்ளி கட்டிடங்களுக்கு, அடுத்த கல்வியாண்டுக்குள் மேற்படி அனுமதியற்ற பள்ளி கட்டிடத்திற்கு அனுமதி பெற்று சமர்ப்பித்து விடுவதாக ஒப்புதல் அளித்துள்ளவாறு, இதுநாள் வரை அனுமதியற்ற பள்ளி கட்டிடத்திற்கு எவ்வித அனுமதி பெற்று இந்நகராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மேற்கண்டுள்ள அனுமதியற்ற பள்ளி கட்டிடத்திற்கு அனுமதி பெற்று விண்ணப்பிக்கும் பட்சத்தில் சுகாதாரச் சான்று வழங்க பரிசீலனை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டு தொடர்நடவடிக்கையில் உள்ளது. மேலும், மனுதாரர்குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 56–ன் துணை பிரிவு (2ஏ)ன் கீழ் மேற்படி அனுமதியற்ற பள்ளி கட்டத்தினை பூட்டி முத்திரையிட உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருவாரூர் அவர்களால் அறிவிப்பு அனுப்பபட்டு நடவடிக்கையில் உள்ளது. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் மேற்கண்ட சட்டப்பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட அறிவிப்பினை உறுதி செய்யும் பட்சத்தில் மேற்படி பள்ளியினை மூடி முத்திரையிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர், முதலாம் எதிர்மனுதாரரான திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான புனித அந்தோனியார் மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் ஆகியோரை 24.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இரண்டாம் எதிர்மனுதாரரான புனித அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளரின் 19.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார். அதில்:–

"திரு. P. அன்பரசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் என்று தன்னை அடையாளம் காட்டி எங்கள் ஊரில் உள்ள முக்கியஸ்தர்களிடம் பணம் பறிக்க இவ்வாறு பொய்யான மனுவினை அளிப்பது அவரது வழக்கம்.

எங்கள் பள்ளி கடந்த 50 ஆண்டுகளாக திருத்துறைப்பூண்டி நகரில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி நல்மதிப்புடன் விளங்குவதால், அவர் காழ்புணர்சி காரணமாக இந்த மனுவினை அளித்துள்ளார். மனுவில் திருத்துறைபூண்டி நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சாலையில் பொதுப்பணித் துறையிடம் அனுமதி வாங்கி பாலம் கட்டுவது அவசியமற்றது என்பது அனைவரும் அறிந்ததே. நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலை 30 அடி கொண்டது. அந்த சாலையில் நகராட்சியால் அமைக்கப்பட்ட 12 அடி சாலையை தவிர மற்ற இடங்கள் அனைத்தும் அங்குள்ளவர்களால் ஆக்கிரிமித்து வீடு கட்டி குடியேறியுள்ளனர்.

இதனால் பள்ளி நிர்வாகம் மாணவர்களின் நலன் கருதி விபத்து ஏற்படாமல் தடுக்க உயர்நீதிமன்றத்தை அணுகி 15.11.2021 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆணைப்பிறப்பித்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கும், நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் அறிவுறுத்தியது. அதனை நகராட்சி நிர்வாகம் அலட்சியம் செய்ததால் மேற்படி P. அன்பரசன் என்ற மனுதாரர் தங்களிடம் தவறான மனுவினை அளித்துள்ளார். அதற்கான உயர்நீதிமன்ற ஆணையினை தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளேன். தாங்கள் தயைகூர்ந்து நகராட்சி நிர்வாகத்திடம் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டி ஆணையிடுமாறு கோரிக்கையினையும் இத்துடன் வைக்கின்றேன்.

2000 மாணவர்கள் படிக்கும் பள்ளியானது அனைத்து வசதிகளையும் போதுமான அளவில் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதற்கான வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய கட்டிட உரிமம், தீயணைப்பு துறையிடம் பெறப்பட்ட தடையின்மை சான்று ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எங்கள் பள்ளிக்கு DTCP அனுமதி வேண்டி 22.08.2024 விண்ணபித்துள்ளோம். மேலும், விவசாய நிலத்திற்கான Re-Classification-க்கும் விண்ணப்பித்து இத்துடன் இணைத்துள்ளேன்.

எங்கள் பள்ளியானது மாவட்டத்திலே சிறந்த பள்ளியென்று துணை முதல்வர் அவர்களால் பாராட்டப் பெற்று அதற்கான சான்றினையும் இணைத்துள்ளேன். மாணவர்களின் நலன் கருதி இப்பள்ளி செயல்பட்டு வருவது சிலருக்கு பொறாமையினையும், காழ்ப்புணர்ச்சியும் தூண்டுவதால் இவ்வாறு தேவையற்ற மனுக்களை பள்ளி மீது சுமத்தி அதன் மூலம் இலாபம் ஈட்ட முயல்கிறார்கள் என்பதை தங்களுக்கு இதன்மூலம் தெளிவாக தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் 24.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருத்துறைபூண்டி நகராட்சிக்குட்பட்ட அரசலடி தெரு, சர்வே எண்.97/2பி மற்றும் 98–ல் விவசாய நிலத்தில் தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முறையான அனுமதியின்றி இயங்கி வருகிறது. ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலை மற்றும் நகராட்சிக்கு சொந்தமான 12 அடி சாலையை பயன்படுத்தி, பொதுப்பணித்துறை அனுமதியின்றி வடிகால் வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் ஆபத்தான வகையில் பயனித்து வருகின்றனர்.

பள்ளிக்குச் செல்லும் சாலை குறுகிய நிலையில் உள்ளதாலும், தினமும் 100–க்கும் மேற்பட்ட வாகனங்கள் செல்வதாலும் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. பள்ளி நிர்வாகம் அனுமதி, அடிப்படை வசதி மற்றும் பாதுகாப்பின்றி செயல்படுவதால் பள்ளி சுவர் இடிந்து மாணவர் இறந்துள்ளார்.

மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திருவாரூர் அவர்களிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 (மேல்முறையீட்டு கடிதம்) மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு மேற்படி துறையின் மூலம் அணுகு சாலைக்கான ஆணையர் திருத்துறைப்பூண்டி நகராட்சியிடமிருந்து பெறப்பட்டதாக தெரிவித்து பொய்யான நகல் இணைத்து அனுப்பட்டுள்ளது. மேலும், முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை. மேற்படி பள்ளிக்கு வருடத்திற்கு ஒரு முறை பதிவு புதிப்பித்து வழங்கும் நிலையில், பள்ளி நிர்வாகத்திடமிருந்து உரிய ஆவணங்கள் மற்றும் உரிய கள ஆய்வு மேற்கொள்ளாமல் புதுப்பித்து வழங்கியுள்ளார்கள்.

ஆபத்தான வகையில் இயங்கி வரும் அணுகுபாதை இல்லாத மேற்கண்ட பள்ளி கட்டிடத்திற்கான தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 56–ன் துணைப் பிரிவு (2A)–ன் கீழ் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இயங்கும் பள்ளி கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு புகார் அளித்ததன் அடிப்படையில் மேற்படி துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க கடிதம் ந.க.எண்.21732/2024/டிசிபி 12, நாள் 10.10.2024 மூலம் திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கடிதம் பெற்றேன். ஆனால் திருவாரூர் மாவட்ட நகரமைப்பு துறையின் மூலம் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்து மாவட்ட நகரைமைப்பு துறையின் மூலம் கடித ந.க.எண்.747/2024/டிவிஆர், நாள் 24.10.2024 மூலம் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், திருத்துறைப்பூண்டி நகராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும், இன்றைய விசாரணையின் போது எனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை கையொப்பமிட்டு மாண்புமிகு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளேன். ஆதார நகல்கள் 14 தாள்கள், வாக்குமூலம் 2 பக்கம் ஆக 16 தாள்கள் இணைத்துள்ளேன். எனவே, இதுவரை பள்ளி நிர்வாகத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் மேற்படி சட்டப்பிரிவின்படி பள்ளி கட்டிடத்தை பூட்டி முத்திரையிடவும் மேலும் கட்டிட அனுமதி பெறாமல் இயங்கி வரும் பள்ளி பதிவினை மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திருவாரூர் அவர்கள் உடன் ரத்து செய்ய உரிய ஆணை பிறப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முறையான அனுமதி பெறாமலும், சட்டத்திற்கு புறம்பாகவும் பல ஆண்டுகளாக இயங்கி வருவதால் உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தில் 24.02.2026 நாளிட்ட எழுத்து மூலமாக அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அதில் –

“திருவாரூர் மாவட்டம், திருத்துறைபூண்டி வட்டம் மற்றும் நகரம், 6வது வார்டு, அரசலடி தெருவில் சர்வே எண். 97/2பி மற்றும் 98 விவசாய நிலத்தில் அமைந்துள்ள தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியானது முறையான அனுமதி பெறாமலும், சட்டத்திற்கு புறம்பாகவும் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

மேலும், மேற்காணும் பள்ளிக்கு செல்ல முறையான அணுகுபாதை எதுவும் இல்லாமல் ஆதிதிராவிட மக்களுக்கு, ஆதிதிராவிட நலத்துறையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரு சாலையினை பயன்படுத்தியும், பொதுப்பணிதுறையின் அனுமதிபெறாமல் வடிகால் வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைத்தும், மாணவர்கள், மாணவியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆபத்தான வகையில் செல்லும் வகையில் உள்ளது.

மேலும், மேற்கண்ட பள்ளிக்கு செல்லும் குறுகிய சாலையில் நாள்தோறும் 100க்கும் மேற்பட்ட வேன்கள், கார்கள் மற்றும் இருசக்கரவாகனங்கள் சென்று வருவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகிறது.

அடிப்படை வசதி இல்லாமல் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் இயங்கிவரும் பள்ளி கட்டிடத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் பள்ளியின் கழிவறை சுவர் இடிந்து விழுந்து பள்ளியில் பயின்ற மாணவர் இறந்துள்ளார். இதனை பள்ளி நிர்வாகம் வெளியில் தெரியாமல் மூடி மறைத்துள்ளது. இந்நிலையில் பள்ளி கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி ஏதும் பெறப்படாமல் சட்டத்திற்கு புறம்பாகவும் பள்ளியை நடத்துவதற்கு அடிப்படை வசதியின்றியும் பாதுகாப்பற்ற முறையில் செயல்பட்டுவருகிறது.

மேலும், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திருவாரூர் அவர்களிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005 (மேல்முறையீட்டு கடிதம்) மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு மேற்படி துறையின் மூலம் அணுகுசாலைக்கான ஆணையர் திருத்துறைப்பூண்டி நகராட்சியிடமிருந்து பெறப்பட்டதாக தெரிவித்து பொய்யான நகல் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. மேலும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை, மேற்படி பள்ளிக்கு வருடத்திற்கு ஒரு முறை பதிவு புதுப்பித்து வழங்கும் நிலையில் பள்ளி நிர்வாகத்திடமிருந்து உரிய ஆவணங்கள் மற்றும் உரிய கள ஆய்வு மேற்கொள்ளாமல் புதுப்பித்து வழங்கியுள்ளார்கள். இது மேற்படி அலுவலர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு மேற்படி பள்ளிக்கான பதிவினை புதுப்பித்து வழங்கியுள்ளது தெரிய வருகிறது.

எனவே, ஆபத்தான வகையில் இயங்கிவரும் அணுகுபாதை இல்லாத மேற்கண்ட பள்ளி கட்டிடத்திற்கான தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 56–ன் துணைப் பிரிவு (2A)–ன் கீழ் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இயங்கும் பள்ளி கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு புகார் அளித்ததின் அடிப்படையில், மேற்படி துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க கடித ந.க.எண்.21732/2024/டிசிபி–12, நாள் 10.10.2024 மூலம் திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கடிதம் பெற்றேன். ஆனால் திருவாரூர் மாவட்ட நகரமைப்பு துறையின் மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல், நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்து மாவட்ட நகரமைப்பு துறையின் மூலம் கடித ந.க.எண்.747/2024/டி.வி.ஆர்., நாள். 24.10.2024 மூலம் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாகம், திருத்துறைப்பூண்டி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே சட்டத்தினை மதிக்காமல் பணபலத்தின் மூலம் அரசு அலுவலர்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்ற எண்ணத்தில் செயல்படும் மேற்படி பள்ளி நிர்வாகத்திற்கு பாடம் கற்பிக்கும் வகையில் உரிய சட்டப்பிரிவின்படி இதுநாள் வரை நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும். உடன் மேற்படி சட்டபிரிவின் கீழ் பள்ளி கட்டிடத்தினை பூட்டி முத்திரையிடவும், மேலும் கட்டிட அனுமதி பெறாமல் இயங்கிவரும் பள்ளியின் பதிவினை மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திருவாரூர் அவர்கள் உடன் ரத்து செய்யவும் உரிய ஆணை பிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

8. முதலாம் எதிர்மனுதாரரான திருத்துறைபூண்டி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.0332/2012/எப்1, நாள் 18.02.2026–ல் திருத்துறைபூண்டி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளின் தினசரி முன்னேற்ற அறிக்கையை, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், 24.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு. க. அருள்முருகன் என்பவரை அனுப்பிவைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத்

தொடர்ந்து, திருத்துறைப்பூண்டி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு. க. அருள்முருகன் என்பவர் 24.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ள தூய அந்தோனியார் பள்ளி வளாகத்தில் கட்டிட அனுமதி எண்.25/2000, 42/2003 மற்றும் 10/2006 ஆகிய எண்களில் கட்டிட அனுமதி திருத்துறைப்பூண்டி நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. அனுமதி அளிக்கப்பட்ட கட்டிட பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்டதற்கு மாறுபாட்டுக் கட்டுமானத்திற்கான அறிவிப்பு 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப்பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பள்ளி வளாகத்தில் கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப்பிரிவு 216–12 மற்றும் இதுவரை திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998 பிரிவு 133, 134 மற்றும் 135 (1)–ன் கீழ் பள்ளி கட்டிடத்திற்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதனைத் தொடர்ந்து பள்ளி நிர்வாகம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களுக்கு அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளதாக நகராட்சி நிர்வாகத்திற்கு பதில் அளித்தனர். அதன் உண்மைத்தன்மை கோரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களுக்கு நகராட்சியினால் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்திற்கு பெறப்பட்ட பதிலில் பள்ளி கட்டிட அனுமதி கோரிய இடம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்துறைப்பூண்டி நகராட்சி முழுமைத்திட்டத்தில் விவசாய பகுதியில் உள்ளதனை கல்வி உபயோகப்பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்படாத நிலையில் நில உபயோக மாற்ற விதிமீறல்கள் மற்றும் TNCDBR 2019 படியான அநேக கட்டிட விதி மீறல்களுடன் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மனுதாரரின் மேல்முறையீட்டு மனு அரசாணை (3டி) எண்.23, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.5(1) ) துறை, நாள் 07.06.2024ல் மறுத்து திருப்பப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம், 35, 1972) பிரிவு 56ன் துணைப்பிரிவு (2ஏ)ன் கீழ் மேற்படி அனுமதியற்ற பள்ளிக்கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, மேற்படி பள்ளி நிர்வாகமானது சுகாதார சான்று கோரி திருத்துறைப்பூண்டி நகராட்சியிடம் விண்ணப்பித்திருந்தார்கள். இந்நிலையில் பள்ளி நிர்வாகத்திற்கு மேற்கண்டவாறு பலமுறை அறிவிப்புகள் வழங்கப்பட்டும், அனுமதியற்ற கட்டிடங்களுக்கு அனுமதி பெறுவதற்கோ, நில உபயோக பயன்மாற்றம் செய்வதற்கோ எவ்விதமான உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்பதால், நகராட்சி அறிவிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அனுமதியற்ற பள்ளி கட்டிடங்களை முறைப்படுத்தி அதன் விவரத்தினை சமர்ப்பிக்கும்பட்சத்தில் சுகாதார சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பள்ளி நிர்வாகத்திற்கு பதிலுரை அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவவகம், திருவாரூர் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதன் தொடர்ச்சியாக உள்ளாட்சி நிர்வாகத்தால் விதிகளின்படி நடவடிக்கை தொடரப்படும் என மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9. இரண்டாம் எதிர்மனுதாரரான தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் 24.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கடந்த 1976ம் வருடம் முதல் முறையான அனுமதிகள் பெற்று இயங்கி வருகிறது. கடந்த 07.02.2026 அன்று பள்ளி நிர்வாகம் பொன்விழா கொண்டாடப்பட்டுள்ளது.

பள்ளி கட்டிடத்திற்கு DTCP approval–க்கு 2013ம் ஆண்டு விவசாய நிலத்தை தரிசு நிலமாக மாற்றுவதற்கு விண்ணப்பித்தோம். அனுமதி கிடைத்துவிடும் என நினைத்து காத்திருந்தோம். அனுமதி கொடுக்காத காரணங்கள் எங்களுக்கு தெரியவில்லை. தற்போது DTCP approval–க்கு விண்ணப்பிக்கும்போது தான் எங்கள் நிலம் விவசாய நிலமாக உள்ளது என்பதை அறிந்து கொண்டோம். தற்போழுது எங்களது பள்ளி கட்டிடம் உள்ள நிலங்களை தரிசு நிலங்களாக மாற்றுவதற்கு இணையதள வழியில் விண்ணப்பித்துள்ளோம்.

பள்ளி செல்வதற்கான அணுகுபாதையின் அகலம் 30 அடி உள்ளதாக நில அளவையில் உள்ளது. அந்தச் சாலையில் ஆதி திராவிட மக்களின் ஆக்கிரமிப்புக்கள் அதிகம் உள்ளதை நகராட்சிக்கு தெரியப்படுத்தி எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்று தெரிந்தபிறகு நீதிமன்றத்தை அணுகி அதற்கான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான ஆணையினை பெற்று இத்துடன் இணைத்துள்ளோம். நீதிமன்ற ஆணைக்கு நகராட்சியினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுமார் 1800 மாணவர் படிக்கும் பள்ளியானது சிலரது குறுகிய மனப்பான்மையினாலும் காழ்ப்புணர்ச்சியினாலும் இவ்வாறு அடிக்கடி எங்களது அலுவல்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் பணம் பறிக்கும் நோக்கத்திலும் செயல்பட்டு வருகிறார்கள். அரசாங்கத்தின் சட்டத்திற்கு உட்பட்டு எங்கள் பள்ளி கட்டிடங்களை சீரமைக்கவும், எங்களது பள்ளி நிலங்களை தரிசு நிலங்களாக மாற்றம் செய்யவும் ஆவன செய்து வருகிறோம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன். அரசாங்க விதிகளுக்கு கட்டுப்படாமல் எங்கள் பள்ளி இயங்கவில்லை என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முதலாவது எதிர்மனுதாரரான திருத்துறைபூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரரான தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளரின் விளக்கம், வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

திருத்துறைபூண்டி நகராட்சியில் விவசாய நிலத்தில் அனுமதியின்றி தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது என்பதும், அணுகுபாதை இல்லாததால், ஆதிதிராவிடர் நலத்துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலை மற்றும் நகராட்சியின் 12 அடி சாலையை பயன்படுத்தி, பொதுப்பணித்துறையின் அனுமதி பெறாமல் வடிகால் வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைத்துள்ளனர் என்பதும், பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் ஆபத்தான வகையில் மேற்படி பாதையில் பயனித்து வருகின்றனர் என்பதும், பள்ளிக்குச் செல்லும் சாலை குறுகியதாக உள்ளதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகிறது என்பதும், ஆவணங்கள் இன்றி, கள ஆய்வு செய்யாமல் பள்ளிக்கு வருடத்திற்கு ஒரு முறை பதிவு புதுப்பித்து வழங்கியுள்ளனர் என்பதும், அடிப்படை வசதி இன்றி, பாதுகாப்பற்ற நிலையில் இயங்கிவரும் இப்பள்ளி கழிவறை சுவர் இடிந்து விழுந்து பள்ளி மாணவர் இறந்துள்ளார் என்பதும், கட்டிட அனுமதி பெறாமல் இயங்கிவரும் பள்ளி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு–பி, பிளாக்–5, நகரளவை எண். 22/1, 23/3, 23/4 மற்றும் 23/5 (புல எண்கள்–97/2பி, 98) அரசலடி தெருவில் புனித அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது என்பதும், பள்ளி தாளாளரால் தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் என சுமார் 1495.97 சதுர மீட்டர் அளவிற்கு கூடுதல் கட்டிடம் கட்ட அனுமதி கோரியதற்கு, சம்மந்தப்பட்ட இடம் திருத்துறைப்பூண்டி முழுமைத் திட்டத்தில் வணிகப் பகுதியாக உள்ளதாலும், விவசாயப் பகுதியாக அமைவதாலும் அனுமதி அளிக்க வழிவகை இல்லை எனவும், நிலப் பயன்பாடு (கல்வி உபயோக பகுதியாக) மாற்றம் செய்யப்பட்டபின் பரிசீலிக்கப்படும் என நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், இதனால் 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், பிரிவு 216 (1) (2), 205 (1) (2)ன் படி திருத்துறைப்பூண்டி நகராட்சி அறிவிப்பு எண். 1/2023/எப்1, நாள் 05.02.2015, 23.03.2023 மூலம் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமானத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி இடத்தில் 2000–ஆம் ஆண்டு முதல் பள்ளி இயங்கி வருவதாகவும், 2011க்கு முன் கட்டப்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் நகராட்சியின் உரிமையாணை பெற்று அதற்கான சொத்துவரி முறையாக செலுத்தி

வருவதாக பள்ளி தாளாளர் தவறாக தகவல் அளித்துள்ளார் என்பதும், நகராட்சியால் 2000 ஆம் ஆண்டு கட்டிட அனுமதி பெறப்பட்ட சுமார் 13,180 சதுர அடி பரப்பளவு கொண்ட தரைதள கட்டிடத்திற்கு, 2001–2002 ஆம் ஆண்டு 6 சொத்துவரி (வரி விதிப்பு எண்கள் 2826, 2827, 2828, 2829, 2830, 2831) கேட்பு எழுப்பப்பட்டுள்ளது என்பதும் முதலாவது எதிர்மனுதாரரான திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மேலும், 2000 ஆம் ஆண்டுக்கு பின் (1) கட்டிட அனுமதி எண்.25/2000, நாள் 16.05.2000ல் முதல்தள கட்டிடம் சுமார்13,180 சதுர அடி (2) கட்டிட அனுமதி எண்.42/2003, நாள் 07.10.2023ல் கூடுதல் பள்ளி கட்டிடம் தரைதளம், முதல் தளம், மற்றும் இரண்டாம் தளம் என சுமார் 7266 சதுர அடி கட்டிடம் (3) அனுமதியற்ற கூடுதல் கட்டிடம் சுமார் 18145 சதுர அடி என சுமார் 38591 சதுர அடி கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டுமானத்திற்கு 1920ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப்பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், பள்ளியின் அனுமதியற்ற கட்டிடங்களை முறைப்படுத்திட அனுமதி கோரிய DTCP விண்ணப்ப எண். APP 10084 நாள் 22.08.2024 திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதும், பள்ளி கட்டிடம் அமைந்துள்ள இடம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்துறைப்பூண்டி நகராட்சி முழுமைத் திட்டத்தில் விவசாயப் பகுதியில் உள்ளதை கல்வி உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யாததால் நில உபயோக மாற்ற விதிமீறல்கள் மற்றும் TNCDBR 2019 படி அநேக கட்டிட விதி மீறல்களுடன் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மனுதாரரின் மேல்முறையீட்டு மனு அரசாணை (3டி) எண்.23, வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி (ந.வ.5(1)) துறை, நாள் 07.06.2024ன் படி நிராகரிக்கப்படுவதாக திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் திருப்பப்பட்டுள்ளது என்பதும், 2024–25ஆம் கல்வி ஆண்டிற்கான சுகாதாரச் சான்று வழங்கும்போது அனுமதியற்ற பள்ளி கட்டிடங்களுக்கு, அடுத்த கல்வியாண்டுக்குள் அனுமதி பெற்று சமர்ப்பிப்பதாக தெரிவித்து இதுநாள் வரை அனுமதி பெற்று சமர்ப்பிக்கவில்லை என்பதும், இதனால் 2025–26 ஆம் கல்வி ஆண்டிற்கான சுகாதாரச் சான்று வழங்க கோரிய விண்ணப்பம் அனுமதிக்க இயலாமல் பரிசீலனையில் உள்ளது என்பதும், மேற்படி அனுமதியற்ற பள்ளி கட்டடத்தினை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 56–ன் துணை பிரிவு (2–A)ன் கீழ் பூட்டி முத்திரையிட உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதும் முதலாவது எதிர்மனுதாரரான திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, 1976–ம் வருடம் முதல் அனுமதி பெற்று இயங்கி வருகிறது என்பதும், மேற்படி பள்ளியின் பொன்விழா 07.02.2026 அன்று கொண்டாடப்பட்டுள்ளது என்பதும், அரசு விதிகளுக்குட்டுப்பட்டு செயல்பட்டு வரும் பள்ளியில் சுமார் 1800 மாணவர் படித்து வருகின்றனர் என்பதும், பள்ளி நிலங்களை தரிசு நிலங்கலாக மாற்றம் செய்ய ஆவன செய்து வருகின்றனர் என்பதும், DTCP approval–க்கு விண்ணப்பம் சமர்பித்தபோதுதான் பள்ளி அமைந்துள்ள நிலம் விவசாய நிலமாக உள்ளது என்ற விவரம் அறிந்துள்ளனர் என்பதும், பள்ளி கட்டிடம் உள்ள நிலங்களை தரிசு நிலங்களாக மாற்றுவதற்கு இணையதள வழியில் விண்ணப்பித்துள்ளனர் என்பதும், நில அளவையில் பள்ளி செல்வதற்கான அணுகுபாதையின் அகலம் 30 அடி என இருந்ததால், சாலையில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற மாண்பமை நீதிமன்றத்தின் ஆணை மீது நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், சிலரின் குறுகிய மனப்பான்மை மற்றும் காழ்ப்புணர்ச்சி காரணமாக அலுவல்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துகின்றனர் என்பதும் இரண்டாவது எதிர்மனுதாரரான தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட அரசலடி தெருவில் செயல்பட்டு வரும் தூய அந்தோணியார் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி விவசாய நிலத்தில் அனுமதியின்றி கட்டிடங்கள் கட்டப்பட்டு செயல்பட்டுவருவதாலும், பள்ளி கட்டிடம் அமைந்துள்ள இடம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்துறைப்பூண்டி நகராட்சி முழுமைத் திட்டத்தில் கல்வி உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்படாத விவசாயப் பகுதியாக உள்ள நிலையில், நில உபயோக மாற்ற விதிமீறல்கள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019ன் (TNCDBR,2019) படி கட்டிட விதி மீறல்களுடன் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட பிரிவு 216 (1) (2), 205 (1) (2)ன் கீழ் பள்ளி கட்டிடம் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமானமாக கருதி அறிவிப்புகள் வழங்கி, தமிழ்நாடு நகர்

மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 56–ன் துணை பிரிவு (2–A)ன் கீழ் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டடத்தினை பூட்டி முத்திரையிட உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாலும், முதலாவது எதிர்மனுதாரரான திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்று, பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவும், மாவட்ட நகர் ஊர் அமைப்பு அலுவலகத்தின் தொடர் நடவடிக்கைகளுக்கு உரிய ஒத்துழைப்பு நல்குமாறும் திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. P. அன்பரசன்,
141 சி, மருத்துவமனை தெரு, நேருநகர்,
திருத்துறைப்பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி,
திருத்துறைப்பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.

3. திரு. P. வின்செண்ட் ஆரோக்கியராஜ்,
தாளாளர், தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
அந்தோணியார் நகர், திருத்துறைப்பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 24/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032